Holland Bloorview
Kids Rehabilitation Hospital

# சமுதாய Snoezelen இயக்கச் செயல்திட்டம்

snoezelen@hollandbloorview.ca

## Snoezelen என்றால் என்ன?

‘Snoezelen’ எனும் சொல் இரு டச்சு சொற்களால் ஆக்கப்பட்டுள்ளது:

- *snufflen* எனும் சொல் தேட அல்லது ஆராய என்னும் பொருள் தருகிறது
- *doezelen* எனும் சொல் தளர்வாக இருத்தல் அல்லது ஒரு அற்புதமான இடத்தில் இருத்தல் என்னும் பொருள் தருகிறது

Snoezelen அறைகள் என்பவை இசை, ஒளியேற்றல், மென்மையான அதிர்வுகள், தொட்டுணரக்கூடிய உணர்வுகள், நறுமருந்துச் சிகிச்சை போன்றவற்றைப் பயன்படுத்துகின்ற வகையில் செயற்கையாக வடிவமைக்கப்பட்ட இடங்கள் ஆகும். பயனர்களின் உணர்திறன் தேவைகளின் அடிப்படையில், அந்த இடம் ஓய்வெடுக்கக்கூடியதாகவோ அல்லது தூண்டக்கூடியதாகவோ இருக்கக்கூடும். அறையானது இலக்கு அமைப்பின் அழுத்தத்தில் இருந்து விடுபடும் வகையில் அமைந்துள்ளது, மேலும் பயனர்கள் தங்களின் சுய வேகத்தில் செயல்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

## Snoezelen ஆனது எவ்வாறு என் குழந்தை அல்லது வாடிக்கையாளரின் சிகிச்சைத் திட்டத்தின் ஒரு அங்கமாக இருக்க முடியும்?

ஒரு பயிற்சியளிக்கப்பட்ட பராமரிப்பாளரால் ஆதரிக்கப்படும்போது, ஒரு snoezelen சூழலானது இவற்றைச் செய்ய இயலும்:

**உணர்திறன் ஒழுங்குமுறையை அளித்தல்:** உணர்திறன் தகவலைச் செயல்படுத்துவதில் சிரமத்தைக் கொண்டுள்ள வாடிக்கையாளர்களுக்கு, அறையில் உள்ள தூண்டலின் அளவு அவர்களின் தேவைகளுக்குப் பொருந்தும் வகையில் மாற்றியமைக்கப்பட முடியும்.

**உணர்திறன் இயக்கக் கற்றல், மொழி மற்றும் அறிவாற்றல் வளர்ச்சி ஆகியவற்றை மேம்படுத்துதல்**: வளமாக்கப்பட்ட சூழல் மற்றும் உணர்திறனுக்கு 'மிகச்சரியான' அளவிலான உள்ளீடு ஆகியவை புதிய திறன்களைக் கற்றலில் உதவக்கூடும்.

**பதற்றத்தைக் குறைத்தல்:** தளர்ச்சியாக்கப்பட்ட வளிமண்டலமானது பங்கேற்பாளர் மற்றும் பராமரிப்பாளர்/சிகிச்சையாளர் ஆகியோரின் மன அழுத்தத்தைக் குறைக்கிறது, இது ஒரு நேர்மறையான உணர்வுசார் அனுபவத்தை ஆதரிக்கிறது.





Holland Bloorview
Kids Rehabilitation Hospital

## Snoezelen அறை மற்றும் குளத்தை யார் பயன்படுத்திக்கொள்ள முடியும்?

சமூக Snoezelen அறை மற்றும் குளம் செயல்திட்டமானது குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் போன்ற அனைத்து வயதினருக்கும் குறைபாடுகளுடையோருக்கும் அணுகக் கூடியவையாக உள்ளன. இந்தச் செயல்திட்டத்தை அணுகுவதற்கு நீங்கள் ஒரு பதிவுபெற்ற Holland Bloorview வாடிக்கையாளராக இருக்க வேண்டிய அவசியம் இல்லை, மேலும் ஒரு மருத்துவப் பரிந்துரையும் தேவைப்படுவதில்லை. நாங்கள் சமூக முகமைகள், பள்ளிகள் மற்றும் குறைபாடுகளுடன் கூடிய தனிநபர்களுக்கான ஆதரவு நிறுவனங்கள் ஆகியோரை வரவேற்கிறோம்.

## .சமுதாய Snoezelen செயல்திட்டம்

**மேலும் கற்பதில் ஆர்வம் உள்ளதா? தயவுசெய்து இவரைத் தொடர்பு கொள்ளவும்:**

**பெயர்**: Lorraine Thomas, Snoezelen ஒருங்கிணைப்பாளர் & குடும்ப ஆதரவு சிறப்பு நிபுணர்
**மின்னஞ்சல்** snoezelen@hollandbloorview.ca
**தொலைபேசி**: 1-800-855-0511 என்ற எண்ணை அழைக்கவும். அழைப்பு ஏற்கப்பட்டவுடன் வினவுகையில், (416) 422-7049 என்ற எண்ணை வழங்கவும்

### Snoezelen அறை



Snoezelen அறையானது ஒரு தனித்துவமிக்க உணர்திறன் அனுபவத்திற்கான வாய்ப்புகளை வழங்குவதற்காக இசை, ஒளியேற்றல் மற்றும் மென்மையான அதிர்வுகள் ஆகியவற்றைப் பயன்படுத்துகிறது.

மேல்நிலைத் தளவமைப்பு (Hoyer லிஃப்ட்) கிடைக்கப்பெறுகிறது. வாடிக்கையாளர்கள் கண்டிப்பாகத் தங்களின் சொந்தத் தொங்கல் கயிற்றைக் கொண்டுவர வேண்டும்.

**நேரம்**

திங்கள்கிழமை - வெள்ளிக்கிழமை காலை 9:00 மணி - மாலை 7:00 மணி.
சனிக்கிழமை காலை 10:00 மணி– மாலை 4:00 மணி.
விடுமுறை வார இறுதிகளிலும் சனிக்கிழமை விடுமுறை நாட்களிலும் மூடப்பட்டிருக்கும்

### Snoezelen குளம்



Snoezelen குளமானது விளக்குகள், ஒலிகள் மற்றும் ஒரு வெதுவெதுப்பான சிகிச்சைக் குளத்தின் சிகிச்சையளிக்கும் விளைவுகளுடன் கூடிய தளவமைப்பு ஆகியவற்றை ஒருங்கே கொண்டுள்ளது.

குளத் தளத்தின் மீதும் குடும்ப உடைமாற்றும் அறையிலும் மேல்நிலைத் தடவமைப்பு (Hoyer லிஃப்ட்) கிடைக்கப்பெறுகிறது. வாடிக்கையாளர்கள் கண்டிப்பாகத் தங்களின் சொந்தத் தொங்கல் கயிற்றைக் கொண்டுவர வேண்டும். எதிர்பாலினத்தைச் சேர்ந்த ஏழு வயதுக்கு மேற்பட்ட ஒரு வாடிக்கையாளர் அல்லது குழந்தையைத் தம்முடன் அழைத்து வருவோருக்கு குடும்ப உடைமாற்றும் அறை கிடைக்கப்பெறுகிறது.

**நேரம்**

அமர்வுகளைப் பொறுத்து நேரங்கள் மாறுபடலாம். கூடுதல் தகவல்களுக்கு, இங்கு செல்லவும் www.hollandbloorview.ca/snoezelen

**கட்டணம்**

வாடிக்கையாளர் ஒருவருக்கு வருகை ஒன்றுக்கு $9.76 (HST உட்பட).

அனைத்துப் பராமரிப்பாளர்களும் தாங்களே சுயமாக அறையைப் பயன்படுத்துவதற்கு முன்னர் கண்டிப்பாக Snoezelen அறைப் பயிற்சியைப் பெற்றிருக்க வேண்டும். பயிற்சிக்கான கட்டணம் $26 ஆக உள்ளது. கூடுதல் தகவல்களுக்கு, இங்கு செல்லவும் [www.hollandbloorview.ca/snoezelen](http://www.hollandbloorview.ca/snoezelen)

**இடம்:** 1E165, முக்கியத் தளம்

**கட்டணம்**

வாடிக்கையாளர் ஒருவருக்கு 45 நிமிட அமர்வுக்கு $14.66 (HST உட்பட). ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் ஒரு குறைந்தபட்ச நேருக்கு நேர் வழங்கப்படும் ஆதரவு தேவைப்படுகிறது. *உடன்பிறப்புகள் வரவேற்கப்படுகின்றனர் ஆனால் அவர்களுக்கும் நேருக்கு நேர் வழங்கப்படும் ஆதரவு தேவைப்படுகிறது மேலும் அவர்கள் அமர்வு ஒன்றுக்கு $17.97 (HST உட்பட) கட்டணமாக செலுத்த வேண்டும்.*

**இடம்:** Therapy pool, கீழ்த்தளம்

*கனடாவின் முதல் Snoezelen அறைக்கு முகப்பாக Holland Bloorview Kids Rehabilitation Hospital இருந்தது, இது 1992 ஆண்டில் Bloorview Children's Hospital-இல் திறக்கப்பட்டது (பின்னர் Holland Bloorview உடன் இணைக்கப்பட்டது). சமூக Snoezelen அறை 1995-ஆம் ஆண்டில் திறக்கப்பட்டது. உள்நோயாளிகளுக்கான ஒரு சிறிய அளவிலான எடுத்துச் செல்லக்கூடிய Snoezelen வண்டி 2001-ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்றது. வட அமெரிக்காவின் முதல் Snoezelen குளம் 2002 ஆண்டு அக்டோபர் மாதத்தில் Holland Bloorview Kids Rehabilitation Hospital-இல் திறக்கப்பட்டது.*

*Snoezelen ஆனது 35 ஆண்டுகளுக்கு முன்பு நெதர்லாந்தில் ஆரம்பிக்கப்பட்டது. இது உண்மையில் தீவிரக் குறைபாடுகளுட்ன கூடிய வயதுவந்தோருக்கான ஒரு ஓய்வுகாலச் செயல்பாடாக வடிவமைக்கப்பட்டது. இது தற்போது குழந்தைகள், முதியவர்கள் மற்றும் தீவிர பராமரிப்பு வசதிகளில் (மருத்துவமனைகள் மற்றும் விபத்து சிகிச்சை மையங்கள்) சிகிச்சை பெறுகின்ற நோயாளிகள் உட்பட பல வேறுபட்ட மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது*